RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 224 | ஆகஸ்டு 19, 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# இருக்கன்குடி மாரியம்மன் கோயிலின் புதிய கட்டங்களை திறந்து வைத்த முதலமைச்சர் விஜய்

சென்னை: ஆக.19-

விருதுநகர் மாவட்டம் இருக்கண்குடி மாரியம்மன் கோயிலில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் ஜோசப் விஜய் நேற்று (ஆகஸ்ட் 18) திறந்து வைத்தார்.







விருதுநகர் மாவட்டம் சாத்தூர் பகுதிக்கு அருகில் உள்ள பிரசித்தி பெற்ற இருக்கண்குடி மாரியம்மன் கோயிலில் பக்தர்களின் கோரிக்கையை ஏற்று 23 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அதன்படி, ஒரு முடிகாணிக்கை மண்டபம், 125 நபர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து உணவருந்தும் வகையிலான அன்னதானக் கூடம், 25 நபர்கள் அமர்ந்து உணவருந்தும் வகையிலான 24 விருந்து மண்டபங்கள் மற்றும் 235 பூஜை பொருட்கள் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றைப் பக்தர்களின் பயன்பாட்டிற்கு சென்னை தலைமை செயலகத்தில் வைத்து காணொலி காட்சி மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் நேற்று திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள சமய நிறுவனங்களை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், சொத்துகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டுவரும் அலுவலர் மற்றும் பணியாளர் பணியிடங்களில் அவ்வப்போது ஏற்படும் காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 36 உதவிப் பொறியாளர்கள் (கட்டுமானம்), 38 உதவி ஸ்தபதிகள், 6 செயல் அலுவலர்கள் (நிலை-1 மற்றும் நிலை-3) என மொத்தம் 80 நபர்களுக்கு முதலமைச்சர் விஜய் பணிநியமன ஆணைகளை சென்னை தலைமைச் செயலகத்தில் வைத்து நேற்று வழங்கினார்.

அதாவது, இந்து சமய அறநிலையத்துறைக்காக முதன்முறையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் உதவிப் பொறியாளர் (கட்டுமானம்) மற்றும் உதவி ஸ்தபதி பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டு தற்போது 80 பேர் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், வணிகவரி, பதிவுத்துறை மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் டாக்டர் டி.ஜி. வினய், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை ரவிச்சந்திரன் மற்றும் பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 36 உதவிப் பொறியாளர்கள் (கட்டுமானம்), 38 உதவி ஸ்தபதிகள், 6 செயல் அலுவலர்கள் (நிலை-1 மற்றும் நிலை-3) என மொத்தம் 80 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# அதிமுக எம்எல்ஏக்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கையை கைவிட்டதில் என்ன தவறு?.. உயர்நீதிமன்றம் கேள்வி

சென்னை: ஆக.19-

கொறடா உத்தரவை மீறி வாக்களித்த அதிமுக எம்எல்ஏ-க்களை மன்னித்து விட்டதால், அவர்கள் கட்சி உறுப்பினர்களாகவே நீடிக்கின்றனர். அவர்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கையை கைவிட்டதில் என்ன தவறு உள்ளது என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.



தமிழ்நாடு சட்டப்பேரவையில் தவெக அரசு, கடந்த மே 13-ம் தேதி நம்பிக்கை தீர்மானம் கொண்டு வந்தபோது, கொறடா உத்தரவை மீறி அரசுக்கு ஆதரவாக வாக்களித்ததாகக் கூறி, 25 அதிமுக எம்எல்ஏ-க்களுக்கு எதிராக தகுதி நீக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில், சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்நிலையில், நான்கு எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்ததை அடுத்து, மீதமுள்ள 21 எம்எல்ஏ-க்கள் மன்னிப்பு கோரி கடிதம் அளித்ததால், அவர்களுக்கு எதிரான தகுதி நீக்க நடவடிக்கை கோரிய மனுவை திரும்பப் பெற்றுக் கொள்வதாக எடப்பாடி பழனிசாமி சபாநாயகருக்கு கடிதம் அளித்தார்.

இதை ஏற்று சபாநாயகர், 21 எம்எல்ஏ-க்களுக்கு எதிரான தகுதி நீக்க நடவடிக்கைகளை கைவிடுவதாக பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோரி, வழக்கறிஞர் பி.வி.செல்வகுமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு முன் விசாரணைக்கு வந்த போது, ஏற்கனவே இதே கோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய உள்ளதாக தெரிவித்ததை அடுத்து மனு வாபஸ் பெறப்பட்டது என நீதிபதிகள் தெரிவித்தனர்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சக்திவேல், "கட்சி மாறி வாக்களித்தவர்களை மன்னிக்க அரசியல் கட்சிகளுக்கு அதிகாரமில்லை. கொறடா உத்தரவை மீறியதன் மூலம், சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள், தாமாக முன் வந்து தங்கள் பதவியை துறந்து விடுகின்றனர். அவர்களின் மன்னிப்பை ஏற்று, தகுதி நீக்க நடவடிக்கையை கைவிட்டது, அரசியல் சாசன கேலிக்கூத்து" என வாதிடப்பட்டது.

அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், "இந்த பிரச்சினை கட்சிக்கும், உறுப்பினர்களுக்கும் இடையிலான பிரச்சினை. பொதுச்செயலாளர் மன்னித்து விட்டதால் அவர்கள் மீண்டும் கட்சி உறுப்பினர்களாக செயல்படுகின்றனர். இது சம்பந்தமாக மூன்றாம் நபர் பொதுநல வழக்கு தாக்கல் செய்ய முடியாது" என்றார்.

விசாரணையின் போது குறுக்கிட்ட நீதிபதிகள், கொறடா உத்தரவை மீறி வாக்களித்தவர்களை மன்னித்து விட்டதால், அவர்கள் கட்சி உறுப்பினர்களாகவே நீடிக்கின்றனர். அவர்கள் ராஜினாமா செய்யவில்லை. மனுதாரர் மூன்றாம் நபர். கட்சி வழக்கு தாக்கல் செய்யவில்லை.

சட்டப்படி 15 நாட்களில் மன்னித்து, தகுதி நீக்க நடவடிக்கை திரும்பப் பெறப்பட்டுள்ளது. அதை சபாநாயகர் ஏற்றுள்ளார். இதில் என்ன தவறு உள்ளது. தற்போதைய நிலையில் எந்த கட்சித் தாவல் நடவடிக்கையும் இல்லை" என கருத்து தெரிவித்த நீதிபதிகள் வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# கர்நாடக மாநில நிர்வாகத்தில் "தமிழகம் தலையிடக்கூடாது"

## கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் வலியுறுத்தல்

பெங்களூரு: ஆக.19-

"எந்த மாநிலமும் மற்ற மாநிலத்தின் நிர்வாக விஷயத்தில் தலையிடக் கூடாது," என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் வலியுறுத்தியுள்ளார்.



பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே.சிவகுமாரிடம், கர்நாடக வனத்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து தமிழக தலைவர்கள் வெளியிட்ட கருத்துகள் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதில் அளித்த முதல்வர் டி.கே. சிவகுமார், "ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தில் மற்றொரு மாநிலம் தலையிடக் கூடாது. ஓ. பன்னீர்செல்வம் அல்லது வேறு யாராக இருந்தாலும் இந்த அடிப்படைப் புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள சட்டம்-ஒழுங்கு விவகாரங்களில் என்னால் தலையிட முடியாது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்கே உரிய பிரச்சினைகள் உள்ளன. நமது மாநிலத்தை எப்படிக் காப்பது என்பது நமக்குத் தெரியும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்கள் தங்கள் பணியைச் செய்யட்டும், நாம் நமது பணியைச் செய்வோம். அவர்களின் நிர்வாகத்தில் தலையிட நான் விரும்பவில்லை. நமது மாநிலத்தின் கண்ணியத்தைக் காக்க வேண்டியது அவசியம். அவர்கள் தங்கள் பணியைச் செய்ய வேண்டும்; நாம் நமது பணியைச் செய்ய வேண்டும்." என்று தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜநகர் மாவட்டம் ஹனூர் அருகேயுள்ள காவிரி வனவிலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15-ம் தேதி அதிகாலையில் மானை வேட்டையாடியதாக அந்தோணிசாமி (50), ஜான் ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய மூவரும் அம்மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை தொடர்ந்து, வனத்துறை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன.

கர்நாடக வனப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்களின் உடல்களும் இறுதி திருப்பலிக்கு பின்னர், அவர்களின் சொந்த கிராமங்களில் நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் குறித்து தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக தமிழக அரசு, கர்நாடக அரசிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்றும், இந்த விவகாரம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப் பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்நிலையில், இதற்கு பதில் அளிக்கும் விதமாக கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

# சிபிஐ விசாரணை, கூடுதல் நிதி - 3 தமிழர்கள் கொலையில் பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை: ஆக.19-

"கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில், சிபிஐ விசாரணை வேண்டும், உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு தமிழக அரசு கூடுதல் நிதி அறிவிக்க வேண்டும்," என்று தமிழக சட்டப்பேரவையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தினார்.



கர்நாடக மாநிலம் சாம்ராஜநகர் மாவட்டம் ஹனூர் அருகேயுள்ள காவிரி வனவிலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15-ம் தேதி அதிகாலையில் மானை வேட்டைதோணிசாமி (50), ஜான்ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய மூவரும் அம் மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் இன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது பல்வேறு கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்களும் தங்களது கருத்தை முன்வைத்தனர். அவற்றின் தொகுப்பு வருமாறு:

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் தனது கால்நடை தேடிச்சென்ற 3 தமிழர்கள் சுட்டுக்கொலை, ஒருவர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருகிறார். மான் வேட்டையில் ஈடுபட்டதாக 3 தமிழர்களை குற்றம்சாட்டி கொன்றுள்ளது கர்நாடக வனத்துறை.

2 மாநில எல்லை பகுதியில் கொலை நடைபெற்றுள்ளதால் சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை தேவை. வனத்துறை சுட்டுக்கொன்ற தமிழர்கள் குடுபங்களுக்கு ரூ.5 லட்சம் மட்டுமே இழப்பீடு அறிவிப்பு, தமிழக அரசு கூடுதலாக நிதி தர வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் தொடராத வகையில் கர்நாடக அரசுடன் தமிழக அரசு பேச வேண்டும்." என்று வலியுறுத்தினார்.

முன்னதாகப் பேசிய திமுக எம்எல்ஏ மனோஜ் பாண்டியன் பேசினார். அப்போது அவர், "கர்நாடகாவில் கால்நடை தேடிச்சென்ற 3 தமிழர்களை அம்மாநில வனத்துறையால் போலி என்கவுன்ட்டர் செய்யப்பட்டுள்ளனர். அப்பாவி விவசாயிகளை வனத்துறை சுட்டுக்கொன்றது மனித உரிமை மீறல். பாதிக்கப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு அரசு வேலையும், உரிய நிவாரணமும் வழங்க வேண்டும்" என்றார்.

பாமக எம்எல்ஏ கணேஷ்குமார் பேசும்போது, "கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும். தமிழர்களுக்கான நியாயம், நிவாரணம், நீதி கிடைக்க சிபிஐ விசாரணை நடத்த வேண்டியது அவசியம். பாதிக்கப்பட்ட தமிழர்களின் குடும்பத்துக்கு நிதி உதவியாக ரூ.1 கோடி வழங்க வேண்டும்," என்று வலியுறுத்தினார்.

முன்னதாக, கர்நாடக வனப்பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்களின் உடல்களும் இறுதி திருப்பலிக்கு பின்னர், அவர்களின் சொந்த கிராமங்களில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்திய கம்யூனிஸ்ட் எம்எல்ஏ டி.ராமச்சந்திரன் பேசுகையில், "தமிழர்களின் உயிரை துப்பாக்கி குண்டுகள் தீர்மானிக்கக்கூடாது. சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட கர்நாடக அரசுக்கு தமிழக அரசும் நம் முதல்வரும் அழுத்தம் கொடுக்க வேண்டும்." என்றார்.

# உதகை உழவர்சந்தை பகுதியில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் சார்பில் தானியங்கி பால் வழங்கும் நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திறந்து வைத்து பார்வையிட்டார்





நீலகிரி, ஆக.19-

நீலகிரி மாவட்டம், உதகை சேரிங்கிராஸ் உழவர் சந்தை அருகில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் சார்பில், தானியங்கி பால் வழங்கும் நிலையத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் தலட்சுமி பவ்யா தண்ணீரு திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாவட்ட தெரிவித்ததாவது: ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் நீலகிரி மாவட்டத்தில், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை குறைத்திட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின் படி ஆவின் நிறுவனம் பால் பைகளை தவிர்க்கும் வகையில் சோதனை முயற்சியாக ரூ.7.00 இலட்சம் மதிப்பில் தானியங்கி பால் வழங்கும் நிலையம் இன்றைய தினம் பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த தானியங்கி பால் வழங்கும் நிலையத்தில் பொதுமக்கள் தாங்கள் கொண்டு வரும் பாத்திரத்தில் பாலை வாங்கி செல்லலாம். பால் வாங்க வருபவர்கள் ரொக்கமாகவும், முன் தொகை செலுத்தும் அட்டை மூலமாகவும், G-Pay, Phone Pay மின்னணு பரிவர்த்தனை (UPI) என மூன்று வழிகளில் பணம் செலுத்தலாம். இந்த இயந்திரத்தில் குறைந்த பட்சம் ரூ.10/- முதல் கையில் உள்ள தொகைக்கேற்ப பாலை வாங்கி செல்லாம். மேலும், இந்த இயந்திரத்தின் தேவைகள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் பல்வேறு இடங்களில் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர், ஆவின் நிறுவனத்தின் சார்பில், பால், பால் பவுடர், நெய், பால்கோவா, ஐஸ்கிரீம், பிஸ்கட் உள்ளிட்ட அனைத்து ஆவின் பொருட்களை விற்பனை செய்யும் நடமாடும் வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், ஆவின் பொது மேலாளர் ராஜேஷ்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சித்ரா, ஆவின் மேலாளர்கள் செல்வகணபதி, திருமுருகன் உட்பட பலர் உடனிருந்தனர்.





■ மதுரை மாவட்டம், கலைஞர் நூற்றாண்டு நூலக கூட்டரங்கில்மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., தலைமையில்,மாநகர காவல் ஆணையாளர் எஸ். ராஜேந்திரன், இ.கா.ப., முன்னிலையில் பள்ளி, கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் மனநலம் குறித்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், அனைத்து கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல் கூட்டம்நடைபெற்றது.இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ந. தேவநாதன் , மாநகர காவல் துணை ஆணையர் (வடக்கு) கார்த்திக், இ.கா.ப., மற்றும் மாநகர காவல் துணை ஆணையர் (மதுரை தெற்கு) ஏ.ஜி. இனிகோ திவ்யன் ஆகியோர் உடனிருந்தனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் புனித சவேரியார் தேவலாயத்தில் ரூ.2.28 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் ஆலய சீரமைப்பு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.பிரதாப் மற்றும் மாநகராட்சி ஆணையர் ஜஸ்வர்யா ஆய்வு உடன் திமுக பிரமுகரும் சவேரியார் கோவில் பேராலைய நிர்வாகியுமான கோட்டார் ராஜன் உடன் இருந்தார்.



## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி, ஆக.19-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 630 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது). இராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர். கவிதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மகேஷ், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்).கதிர்வேல் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 7-ம் ஆண்டு ஆடிமாத திருவிழா





மாதவரம், ஆக.19-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி விஷ்ணு நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 7-ம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய விழா குழு ஆலய தலைவர் சிவசங்கரன், சங்க தலைவர் லெனின், ஆலய துனைசெயலாளர் யுவராஜ், சங்க செயலாளர் ராமசந்திரன், ஆலய பொருலாளர் கிருபாகரன், மற்றும் ஆலய ஆலோசகர்கள் வெங்கடேசன், முருககணேஷ், ரவி மற்றும் கோவில் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடை பெற்றது. நிகழ்ச்சியில் ஆலய ஐயர் விக்னேஷ் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பித்தனர்.. இதனைத்தொடர்ந்து திருவிளக்குபூஜை, அம்மனுக்கு கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.இதில் சுற்றுவட்டார பக்தர்கள், ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.



# சம்பள நிலுவைத்தொகையை வழங்கிட கோரி அரசு பள்ளி தூய்மை பணியாளர்கள் மனு

கிருஷ்ணகிரி, ஆக.19-

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், சம்பள நிலுவைத்தொகையை வழங்கிட கோரி அரசு பள்ளி தூய்மை பணியாளர்கள் மனு அளித்தனர். கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று, அரசுப் பள்ளி தூய்மை பணியாளர்கள் சங்க மாநில அமைப்பாளர் ஜெயபிரதாபன் தலைமையில், 15க்கும் மேற்பட்டோர் தூய்மை பணியாளர்கள் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: பள்ளிக்கல்வித்துறை சார்பில் செயல்படும் அரசு துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு கடந்த 2025ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டது. துவக்கப்பள்ளிக்கு ரூ.500, நடுநிலைப்பள்ளிக்கு ரூ.800, உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.1,150, , மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.1,500 என உயர்த்தப்பட்டது. ஆணை பிறப்பிக்கப்பட்டு, 11 மாதங்கள் ஆகியும் சம்பளம் நிலுவைத் தொகை வரவில்லை. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பணிபுரியும் துவக்கப்பள்ளி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.5,500, நடுநிலைப் பள்ளி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.8,800, உயர்நிலைப் பள்ளி பணியாளர்களுக்கு ரூ.12,650, மேல்நிலைப் பள்ளி பணியாளர்களுக்கு ரூ.16,500 சம்பள நிலுவை தொகையை உடனடியாக பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மல்லிகை பூ விலை கடும் சரிவு விவசாயிகள் வேதனை

கிருஷ்ணகிரி, ஆக.19-

ஆடி மாதம் நிறைவடைந்ததால் மல்லிகை பூ விலை கிலோ ரூ.1,500-ல் இருந்து ரூ.150-க்கு கடும் சரிவு. விலை கட்டுப்படியாகாததால் அறுவடை கூலியைக்கூட ஈடுகட்ட முடியாமல் விவசாயிகள் வேதனை. கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தென்பண்ணை ஆற்றில் சுமார் 2 டன் மல்லிகை பூக்களை வியாபாரிகள் கொட்டிச் சென்றனர். மல்லிகைக்கு உரிய விலை நிர்ணயம் செய்து, மலர் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை.

# ஆற்காடு ஸ்ரீ பெருந்தேவி தாயார் சமேத வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் விஷ்ணுபதி புண்ணிய கால சிறப்பு பூஜை



ராணிப்பேட்டை, ஆக.19-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தென் பாலாற்றங்கரையில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பெருந்தேவி தாயார் சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் விஷ்ணுபதி புண்ணிய காலம் சிறப்பு பூஜை நடைபெற்றது. முன்னதாக அதிகாலை 5 மணிக்கு ஸ்ரீ வரதராஜ பெருமாளுக்கும். பெருந்தேவி தாயாருக்கும் பல்வேறு திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகமும், வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு ஆராதனையும் அதனைத் தொடர்ந்து கோ பூஜையும் நடைபெற்றது. விஷ்ணுபதி புண்ணிய காலம் என்பது வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி ஆகிய மாத பிறப்பு அன்று சூரியன். ரிஷபம், சிம்மம், கும்பம், விருச்சகம் ஆகிய ராசிகளில் பிரவேசிக்கும் நேரம் ஆகும். இந்த நேரத்தில் பெருமாளையும், விஷ்ணுவையும் நினைத்து கோயிலை 27 முறை வளம் வந்து வேண்டுதல் வைக்கும் போது அது உடனடியாக நிறைவேறுவதாக ஐதீகம். பக்தர்கள் அதிகாலை முதலே ஏராளமான பக்தர்கள் கோயிலை 27 முறை வலம் வந்து வேண்டுதல் வைத்து சென்றனர். நிகழ்ச்சியை அறங்காவலர் குழு தலைவர் ஏ பி சத்தியநாராயணன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் தேவி, வாசுகி சரவணன். சீனிவாசன், சேஷாத்திரி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இறுதியில் அனைவருக்கும் கோவில் சார்பாக பிரசாதம் வழங்கப்பட்டது. ஆலய திருப்பணி வேலை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## போதைப் பொரு கள் குறித்து தகவல் தெரிவிக்க செல்போன் எண்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு

குமரி, ஆக.19-



குமரி மாவட்டத்தில் குற்றச்செயல்களை தடுக்கம் வகையில் போலீசாரின் தீவிர கண்காணிப்பு மற்றும் ரோந்து பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் குற்றச்செயல்கள் குறைந்துள்ளன. பொதுமக்களின் புகார் மனுக்கள் மீதான போலீஸ் விசாரணையின் திருப்தி, பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், போலீஸ் துறை பொதுமக்கள் உறவை மேம்படுத்த ஆலோசனைகள், சட்டம் ஒழுங்கு மற்றும் போதைப்பொருட்கள் தொடர்பான தகவல்களை 7708239100, 6385211224 ஆகிய செல்போன் எண்களில் தெரிவிக்கலாம். புகார் அளிப்பவர்களின் பெயர், விவரம் ரகசியம் காக்கப்படும்.



## விளாங்காடுபாக்கம் கிராமம் ஸ்ரீ கங்கையம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா

மாதவரம், ஆக.19-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கங்கையம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் பூங்கரகம் எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு முன்னாள் புழல் ஒன்றிய திமுக செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன் மற்றும் முன்னாள் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பாரதிசரவணன் ஆகியோர் கலந்துகொண்டு திருவிழாவை துவக்கி வைத்து விழாவை சிறப்பித்தனர்.இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக, 2026-2027 -ம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் நடைபெறுவது குறித்து முதல் நிலை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் 17.08.2026 அன்று நடைபெற்றது. உடன், மண்டல முதுநிலை மேலாளர் சாந்தி (திருவண்ணாமலை), மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் நடராஜ முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஸ்டாலின் ஐபிஎஸ் அவர்களின் உத்தரவின் படி கன்னியாகுமரி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திரு. பிரகாஷ் அவர்களின் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர், காவலர்கள் வாகன சோதனை செய்தபோது முறையான பதிவு எண் இல்லாமலும் வாகன ஓட்டுனர் உரிமம் இல்லாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இதில் மொத்தம் 20000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

# நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம், ஆக.19-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் மதுர சிவந்தி ஆதித்தன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்தில் 36-ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மற்றும் 7-ம் தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் செயல் தலைவர்கள் கந்தன், சரவணன், மோகன்குமார், செயலாளர் லோகநாதன் , பொருளாளர் பிரபு துணைத்தலைவர்கள் தீனா, காலேந்திரன், விக்னேஷ், சுரேஷ், துணைச்செயலாளர்கள் , சேகர், விநாயகமூர்த்தி, சௌந்தரராஜன், மணிகண்டன், கலையரசன், கௌரவ ஆலோசகர்கள் பாலசுப்பிரமணியம், கஜபதி, ஆலய முன்னாள் காப்பாளர்கள் சிவபெருமாள், சண்முகம், சுப்பையா உட்பட ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள். கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், ஆலமரம் அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் சுமார் 300-க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிரசியில் பால்குடம் சுமந்தவாறு ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சென்றடைந்தனர். பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து அம்மனுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் பரதநாட்டியம், கங்கை திரட்டுதல், காப்புகட்டுதல், கரகம் எடுத்தல், அம்மன் திருவீதி உலா, அக்னி கப்பறை எடுத்தல், முளைப்பாரி எடுத்தல்,கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்றவை நடைபெற்றது. தொடர்ந்து சுமார் 200-க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்று வட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் , குளிர்பானங்கள் வழங்கினர்.





■ மதுரை மாநகராட்சி, மண்டலம்-4, நெல்பேட்டை வைகை தென்கரை பகுதியில் கட்டப்பட்டு வரும் வணிக (மீன் விற்பனை) கடைகளை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நீலகிரி, ஆக.19-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 137 மனுக்களை பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் பழங்குடியின மாணவ, மாணவியர்களின் கல்வி இடைநிற்றலை தவிர்க்கும் வகையில் தங்கு தடையின்றி பள்ளிகளுக்கு வந்து செல்லும் வகையில் DR.PC THOMAS பவுண்டேசன் சார்பில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்ட பள்ளிப் பேருந்தினை சுற்றுச்சூழல் மேம்பாட்டு குழுவிற்கு (ECO DEVELOPMENT COMMITTEE) வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, மாவட்ட வன அலுவலர் (நீலகிரி வனக்கோட்டம்) கஷாப் சசாங் ரவி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சரவணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராஜா உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 05 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.33,400/- மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., ஆகஸ்ட் 17 அன்று வழங்கினார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி, ஆக.19-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பல்லாவரத்தில் அருள்மிகு ஸ்ரீதேவி முள்காடு கருமாரி அம்மன் ஆலய ஆடி திருவிழாவில் ஆயிரம் பேருக்கு சமபந்தி விருந்து



செங்கல்பட்டு, ஆக.19-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் 13வது வார்டு, நாகரத்தினம் தெரு, காமராஜர் நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீதேவி முள்காடு கருமாரி அம்மன் ஆலயத்தில், ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு மதியம் மற்றும் இரவு இரண்டு வேலைக்கும் ஆயிரம் பேருக்கு சமபந்தி விருந்து வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. 13வது வார்டு வட்டக் கழக செயலாளர் பரமசிவம் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணைச் செயலாளருமான இ.கருணாநிதி, மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி பரமசிவம் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவு அடங்கிய சமபந்தி விருந்தை வழங்கினார். இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மன் அருளைப் பெற்றதுடன், சமபந்தி விருந்திலும் பங்கேற்றனர். நிகழ்ச்சி பக்தி மற்றும் சிறப்புடன் நடைபெற்றது.



# குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் நடைபெற்ற மாநில செயல்வீரர்கள் செயற்குழு கூட்டம், விநாயக சதுர்த்தி விழா ஆலோசனை கூட்டம்

செங்கல்பட்டு, ஆக.19-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் நடைபெற்ற மாநில செயல்வீரர்கள் செயற்குழு கூட்டம், விநாயக சதுர்த்தி விழா ஆலோசனை கூட்டம் நிறுவனரும், தேசிய தலைவருமான டாக்டர் ரமேஷ்பாபுஜி தலைமையில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் இந்து திராவிட மக்கள் கட்சி மாநில அமைப்பு செயலாளர் ரமேஷ் உட்பட ஏராளமான நிர்வாகிகள், மகளிரணியினர் கலந்து கொண்டனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த டாக்டர் ரமேஷ்பாபுஜி பேசுகையில் செயல்வீரர்கள் கூட்டத்தில் தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 1 லட்சம் விநாயகர் சிலைகள் பிரதீஷ்டை செய்ய உள்ளதாகவும், கோவையில் தேசியகொடி ஏந்தி பேரணி நடத்துவதற்குத.வெ.க அரசு அனுமதி மறுத்தமைக்கு இந்து திராவிட மக்கள் கட்சி கண்டனம் தெரிவித்தும், பாராளுமன்ற தொகுதி வரையரை செய்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகபடுத்தி மக்கள் பணி செய்ய விரைவில் நடைமுறைபடுத்த வேண்டும் உள்ளிட்ட 10 தீர்மாணங்கள் நிறைவேற்றபட்டதாக தெரித்தார்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் சிறந்த ஆட்சியாளராக தேர்வு : கிருஷ்ணகிரி மாவட்டம் திமுக மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் துணைத் தலைவர் செந்தில்குமார் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கேபிள் டிவி விநியோகஸ்தர் சின்னசாமி ஆகியோர் மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமாரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்குழந்தைகளை காப்போம் பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் 50 பெண்குழந்தைகளுக்கு சிலம்ப பயிற்சி

## பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் .பிரதாப் சான்றிதழ் வழங்கி பாராட்டு



கன்னியாகுமரி, ஆக.19-

கன்னியாகுமரி மாவட்ட சமூகநலத்துறை சார்பில் நாகர்கோவில் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் தற்காப்பு பயிற்சி பெற்ற மாணவியருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப். சான்றிதழ் வழங்கி பாராட்டு தெரிவிக்கையில் - சமூகநலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் பெண் குழந்தைகளை காப்போம். பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ், ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் திங்கள்நகர் மற்றும் பூதப்பாண்டி ஆகிய பகுதிகளில் செயல்படும் சமூக நல விடுதிகளில் பயனடைந்து வரும் 50 பெண் குழந்தைகளுக்கு 45 நாட்களுக்கு மாலை வேளையில் (90 நிமிடங்கள்) பெண் பயிற்றுநரை கொண்டு சிலம்ப பயிற்சி வழங்கப்பட்டது. சிலம்ப பயிற்சி பெற்ற மாணவிகளின் செயல் விளக்க நிகழ்வு நடைபெற்றது. பயிற்சியில் கலந்து கொண்ட மாணவியர் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். தற்போதைய காலகட்டத்தில் தற்காப்புக் கலைகள் மிகவும் அவசியமான ஒன்றாகும். பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்களின் சுய பாதுகாப்புக்கும், உடலுறுதிக்கும் சிலம்பம் போன்ற பாரம்பரியத் தற்காப்புக் கலைகளைக் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .மு. பிரதாப், தெரிவித்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட சமூகநல அலுவலர் காயத்ரி, மாவட்ட கல்வி அலுவலர் ஜெயராஜ் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கல்வி) சாரதா, பள்ளி துணை அலுவலர் பென்னட், எஸ்.எல்.பி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் தெய்வபிரியா, மாவட்ட பெண்கள் அதிகாரமளித்தல் மைய ஒருங்கிணைப்பாளர் திருமதி.எவர்லின் சுபா. மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



# ஐந்து மாடிகள் ஏறி இறங்கி சலித்து போன பொதுமக்கள் மற்றும் நோயாளிகள்

## ஒரு மாத காலமாக உறங்கிக் கொண்டிருக்கும் பொதுப்பணித்துறை

திருப்பத்தூர், ஆக.19-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தலைமை அரசு மருத்துவமனையில் பொது மக்களுக்காக இயங்கும் மின் தூக்கி பழுதடைந்து ஒரு மாத காலங்கள் ஆகியும் சரி செய்யாமல் இன்றுவரை காலம் தாமதம் செய்வது ஏன்? கண்டுகொள்ளாமல் உறங்கிக் கொண்டிருக்கும் பொதுப்பணித்துறை! நோயாளிகளும் பொதுமக்களும் ஐந்து மாடிகள் ஏறி இறங்கி வருகின்றனர். மூன்றாவது மின் தூக்கி உள்ளதாம் அது யாருக்கும் தெரியவில்லை அந்த மின் தூக்கில் நோயாளிகளுக்கு பயன்படுத்தக்கூடிய மெத்தை ஸ்ட்ரக்சர் போன்ற பொருட்களை ஏற்றுவதற்காகவே வைத்துள்ளார் என்று பொதுமக்கள் கூறுகின்றனர். தலைமை அரசு மருத்துவமனையில் உள்ள மின் தூக்கியை உடனடியாக சரி செய்து பொதுமக்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வேண்டுகோள். நடவடிக்கை எடுப்பார்களா மாவட்ட நிர்வாகம்?



# அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை

சிவகங்கை. ஆக.19-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி சார்பில், “கல்விசார் சிறப்பிற்காக கற்பித்தல் உதவியாளர்களை மேம்படுத்துதல் நவீன கற்பித்தல் திறன்களை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜி. ரவி தொடங்கி வைத்து, விழாவிற்குத் தலைமை தாங்கினார். தனது தலைமையுரையில், அறிவை மாணவர்களுக்கு சிறப்பாக மாற்றிக் கொண்டு செல்வதற்கு1. கற்பித்தல் திறன்கள் மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினார். ஒரு ஆசிரியருக்கு பாட அறிவு சிறப்பாக இருந்தாலும், போதுமான கற்பித்தல் திறன்கள் இல்லையெனில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்க முடியாமல் போகலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் முனைவர் ஜி. கலையரசன், மூத்த பேராசிரியர் மற்றும் தலைவர், கல்வியியல் துறை / கல்வியியல் புல முதன்மையர், அழகப்பா பல்கலைக்கழகம் அவர்கள் சிறப்புரையாற்றி, கற்பித்தல் உதவியாளர்களின் கல்விசார் பொறுப்புகள் மற்றும் திறன் மேம்பாடு குறித்து எடுத்துரைத்தார். மேலும், முனைவர் ஜெ. சுஜாதாமாலினி, பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுத் துறை, அறிவியல் அவர்கள் சிறப்பு வளநபராகக் கலந்து கொண்டு, சிறப்புக் கல்வி, உள்ளடக்கிய கல்வி மற்றும் மாணவர்களின் தனித்துவமான கற்றல் தேவைகளை கருத்தில் கொண்டு கற்பித்தல் முறைகளை மேற்கொள்வது குறித்து பயனுள்ள கருத்துகளை வழங்கினார். அழகப்பா பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜே. இ. மெர்லின் சசிகலா வரவேற்புரை வழங்கினார். முனைவர் சி. அன்புச்செல்வன் நன்றியுரை வழங்கினார்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் நேரடி சேர்க்கை

திருப்பூர், ஆக.19-

திருப்பூர் மாவட்டத்தில், திருப்பூர், தாராபுரம், காங்கேயம் மற்றும் உடுமலையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் (ஐ.டி.ஐ.,) இன்ஜினியரிங் (எலக்ட்ரீசியன், பிட்டர், மெசினிஸ்ட், டர்னர், ஒயர்மேன், வெல்டர் டூல் & டை மேக்கர், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள், எலக்ட்ரானிக் மெக்கானிக், பவுண்டரி மேன், மற்றும் இன்டீரியர் டிசைன் & டெக்கரேசன்) போன்ற பிரிவுகளும் இன்ஜினியரிங் அல்லாத (கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர், ஆடைத் தயாரிப்பு, தையல் தொழில்நுட்பம் மற்றும் கட்டிட பட வரைவாளர்) மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்துடன் புதிதாக துவக்கப்பட்டுள்ள இண்டஸ்ட்ரீஸ் 4.0 தொழிற்பிரிவுகளில் 2026 ஆம் ஆண்டிற்கான சேர்க்கைக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது. எனவே, இந்த வாய்ப்பினை மாணவ மாணவிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பயிற்சி பெறுபவர்களுக்கு தரமான பயிற்சி வழங்கப்படுவதுடன், மாத உதவித்தொகை ரூ,750, சைக்கிள், சீருடை, பாட புத்தகங்கள், காலணி மற்றும் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளி மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் படித்த ஆண் பயிற்சியாளர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழும், பெண் பயிற்சியாளர்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழும் மாதம்தோறும் ரூ. 1000 வழங்கப்படும். பயிற்சி முடித்த பயிற்சியாளர்களுக்கு மத்திய, மாநில அரசு மற்றும் பிரபல தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும்,

8, 10, 11, 12-ம் வகுப்பு மற்றும் டிகிரி, டிப்ளமோ படித்த 14 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பெண்கள் இப்பயிற்சியில் சேர உச்ச வயது வரம்பு இல்லை., தற்போது 31.08.2026 வரை மாணவர்கள் சேர்க்க நீடிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்புவோர், தங்களது 8-ம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை ஆகியவற்றுடன் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நேரில் சென்று, விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு கீழ்க்கண்ட உதவி மைய எண்களை அழைக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்.

உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், திருப்பூர். -94990 55695, 70220 45795

முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருப்பூர்& காங்கேயம். -94990 55696, 63801 73385

முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தாராபுரம் -94990 55698, 98424 81456

முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உடுமலை -94990 55700, 94421 78340



# பாமகவிலிருந்து விலகி திமுகவில் இணைந்த முன்னாள் நிர்வாகி

சிவகங்கை, ஆக.19-

சிவகங்கை மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் மாவட்ட அமைப்புச் செயலாளரும், குருந்தனி என்னென்எஸ் மட்டன் ஸ்டால் உரிமையாளருமான நாகராஜன், அக்கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்து விலகி திமுகவில் இணைந்தார். கல்லல் ஒன்றிய திமுக செயலாளர் நா.நெடுஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்ற இணைப்பு நிகழ்ச்சியில், காளையார்கோவில் திமுக ஒன்றியப் பொருளாளர் ஆர்.எம்.எல்.எம். முருகேசன், முகவை கருணாநிதி, இளைஞரணி ஆறு. சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து நாகராஜனின் நான்கு சக்கர வாகனத்தில் திமுக இருவண்ணக் கொடியை நா.நெடுஞ்செழியன் பொருத்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் சுதந்திர தின விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் சிறந்த சமூக சேவைக்காக முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது மற்றும் ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையை திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த இம்மானுவேல் நெல்சன் ஏசா விற்கு வழங்கியதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.



# நள்ளிரவில் வீடு புகுந்து திருட்டு: 6 பேர் கைது; நகைகள் முழுமையாக மீட்பு

சிவகங்கை. ஆக.19-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நள்ளிரவில் வீடு புகுந்து நகைகளை திருடிய வழக்கில் 6 பேரை போலீசார் கைது செய்தனர். கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் (24), ஞானகுரு (32), வீரப்புகழ் அரசன் (20), சம்பத்குமார் (21), தங்கபாண்டியன் (26) மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாரிமுத்து (32) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து திருடப்பட்ட நகைகள் முழுவதும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட 6 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்..



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்-4, வைகை வடகரை பகுதி மற்றும் தென்கரைப் பகுதியில் வைகை ஆறு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஆற்றினை மேம்படுத்துவது தொடர்பாக மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# கொலை முயற்சி வழக்கில் தொடர்புடையவர் குண்டர் சட்டத்தில் கைது!

சிவகங்கை, ஆக.19-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஷேக் மாதர் தெருவில், முகமது ஆசிப் என்பவரது துணிக்கடையில் உள்ளாடை வேண்டும் எனக் கேட்ட நபர், தன்னிடம் வைத்திருந்த வாளால் முகமது ஆசிப்பின் தலை மற்றும் நெற்றிப் பகுதியில் வெட்டியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் தொடர்புடைய சாயல்குடியைச் சேர்ந்த மன்சூர் அலிகான்



(32) என்பவரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய, சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா பரிந்துரை செய்தார். அதன் பேரில் மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் பிறப்பித்த உத்தரவின்படி, மன்சூர் அலிகான் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.



# நெற்பயிரில் இயற்கை சூழலியல் குறித்த பண்ணைப்பள்ளி

சிவகங்கை, ஆக.19-

வேளாண்மைத்துறை சிவகங்கை LOITE மாவட்டம் சிவகங்கை வட்டாரம் விரிவாக்க சீரமைப்புத்திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் நெற்பயிரில் இயற்கை சூழலியல் குறித்த பண்ணைப்பள்ளி கள்ளராதினிப்பட்டி கிராமத்தில் இன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் சிவகங்கை வேளாண்மை உதவி இயக்குநர் திரு.ஜா. இரவிசங்கர் அவர்கள் நெல் பயிரில் இரகங்கள் தேர்வு, நாற்றங்கால் அமைக்கும் முறைகள் மற்றும் ஜிங்க் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்திட நடவு செய்த 10 நாட்களுக்குள் ஜிங்சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் மணலுடன் கலந்து இடவேண்டும் என்ற தொழில்நுட்ப கருத்து வழங்கினார். வேளாண்மை துறையின் மூலம் விநியோகிக்கப்படும் திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் இவைகளை பயன்படுத்தி விதைநேர்த்தி செய்வதன் மூலம் பூச்சி மற்றும் நோய்தாக்குதல் குறையும் என விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்.

திரு.க.வீரையா வேளாண்மை அலுவலர்( உழவர் பயிற்சி நிலையம்) அவர்கள் பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைபூண்டு, சணப்பை போன்றவற்றை விதைத்து பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்வதினால் மண்வளம் மேம்படும் மேலும் பயிர்களுக்கு தேவையான தழைச்சத்து கிடைப்பதினால் உரச்செலவினை குறைக்கலாம் என்றும். நுண்ணூட்ட சத்துக்களின் பயன்பாடுகள் குறித்த தொழில்நுட்ப கருத்து வழங்கினார்.

திரு.ராஜேஸ் அக்ரி டெவலப்பர்ஸ் அவர்கள் விதைநேர்த்தி முறைகள், நிலம் தயாரித்தல்,20 முதல் 25 நாட்களுக்குள் இளம் நாற்றுகளை நடவு செய்திட அறிவுத்தினார்.

இப்பயிற்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் திரு.ஜெ.தம்பிதுரை, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் திரு.ஆ.ராஜா, திருமதி. வீ.கீதா செய்தனர். இப்பயிற்சியில் கள்ளராதினிப்பட்டி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஆக.19-

சாலைப்பணியாளர்களின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம் சார்பில் மதுரையில் கோரிக்கை மனு அளிக்கும் இயக்கம் நடைபெற்றது. மதுரை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த இயக்கத்தில், சாலைப்பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்தி ஆணை வழங்க வேண்டும் என்பது முக்கிய கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சென்னை




உயர்நீதிமன்றத்தின் WP.No.24797/2015 வழக்கில் 23.10.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கம் வலியுறுத்தியுள்ளது. மேலும், சாலைப்பணியாளர்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் விரைந்து பணி வழங்க வேண்டும், மாநில நெடுஞ்சாலை ஆணையத்தை கலைத்து கிராமப்புற இளைஞர்களை சாலைப்பணியாளர்களாக பணிநியமனம் செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட்டன அதேபோல், சாலைப்பணியாளர்களுக்கு தொழில்நுட்ப கல்வித்துறையின் பொறியியல் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதிய மாற்றத்தைப் போன்று ரூ.5,20020,200 ஊதிய விகிதத்துடன் ரூ.1,900 தர ஊதியம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி நடைபெறும் இந்த கோரிக்கை மனு அளிக்கும் இயக்கத்தில் சங்க நிர்வாகிகள் மற்றும் சாலைப்பணியாளர்கள் திரளாக பங்கேற்க உள்ளனர். நிகழ்ச்சிக்கு கோட்டத் தலைவர் மணிமாறன் தலைமை வகித்தார். கோட்ட துணைத்தலைவர் மாரியப்பன் வரவேற்புரை ஆற்றினார். TNGEA மாநிலச் செயலாளர் கு. நீத்ராஜா தொடக்கவுரை நிகழ்த்தினார். கோட்டச் செயலாளர் த. மகேந்திரன் விளக்கவுரை ஆற்றினார். னமேலும், சங்க நிர்வாகிகள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் துறை நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். . நிகழ்ச்சியின் நிறைவில் மாநில பொருளாளர் தமிழ் நிறைவுரை ஆற்றினார் கோட்ட பொருளாளர் பொ. மாணிக்கம் நன்றியுரை வழங்கினார். சாலைப்பணியாளர்களின் நீண்டகால கோரிக்கைகளை அரசு உடனடியாக பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இக்கோரிக்கை இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161